21st January 1961]

College text-books in Tamil.

* 63 *Q.*—SRI A. VEDARATHNAM }
SRI T. S. RAMASWAMY : } கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கல்லூரியில் தமிழ் போதனுமொழியாக வேண்டிய பாடபுத்தகங்கள் தயாராகிவிட்டனவா?

(இ) என்னென்ன புத்தகங்கள் இதுவரை வெளி வந்திருக்கின்றன?

(உ) இன்னும் எந்தெந்த பாடங்களுக்கு தமிழில் பாடப் புத்தகங்கள் தயாராக வேண்டியது பாக்கி இருக்கிறது?

(எ) அவைகளை தயார் செய்ய என்ன முயற்சி எடுக்கப் பட்டிருக்கின்றது?

(ஐ) அவை எப்போது தயாராகும்?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ, இ, உ, எ, ஐ) இது சம்பந்தமான ஒரு விவர அறிக்கை [a] அங்கத்தினர்கள் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

தேவையான வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

SRI A. VEDARATHNAM : அரசாங்கத்தைத் தவிர இந்தக் கல்லூரிக்கு தமிழ் மூலம் பாட போதனை நடத்துவதற்குப் புத்தகம் எழுத வேறு எழுத்தாளர்கள் முன் வந்தால் அவர்களுக்கு அரசாங்கம் ஆக்கம் அளிக்குமா? அப்படி யாரேனும் முன் வந்திருக்கிறார்களா? அல்லது வேறு ஏதாவது கல்லூரி இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கின்றதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது கோயம்புத்தூர் கல்லூரியில்தான் தமிழில் பாடம் சொல்லிக்கொடுத்து வருகின்றது. வேறு யார் முன் வந்து புத்தகங்கள் எழுதினாலும் தகுந்த சன்மானம் கொடுத்து அவைகளை வெளியிட அரசாங்கம் முன் வரும்.

SRI A. A. RASHEED : May I know, Sir, whether any original text-books in History, Politics or Pshychology are written apart from translation?

THE HON. SRI C. SUBRAMANIAM : They are not mere translations but they are original text-books.

SRI A. VEDARATHNAM : அண்ணாமலை பல்கலைக் கழகம் தமிழில் பல நூல்கள் எழுதி வெளியிட்டிருக்கின்றதே அவைகளை அரசாங்கம் பயன்படுத்தி வருகின்றதா? இல்லையானால் பயன் படுத்த முன் வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதிலும் தகுந்த புத்தகங்கள் இருந்தால் கட்டாயம் பயன்படுத்தத்தான் செய்வோம்.

[a] Printed as Appendix V on pages 238–244 infra.